**BEFORE THE NATIONAL GREEN TRIBUNAL**

**SOUTHERN ZONE, CHENNAI**

**Appeal No.57 of 2022 (SZ)**

IN THE MATTER OF:

Thiru.T.Prabakaran,
Door No.1/91A, Kaattumunnur Post,
Pugalur,
Karur District - 639 111
Email.id-advocatebala89@gmial.com
Ph.No-9047981245 ... Appellant

- Vs. -

1) Union of India
Rep. by the Chief Secretary of Government,
Ministry of Environment, Forests & Climate Change,
Indira Paryavaran Bhavan, Jorbagh Road,
New Delhi - 110 003.
Email-secv-moef@nic.in
Ph.No-011-24695132,011-24695136

2) The State Environment Impact Assessment Authority (SEIAA),
Rep. by its Member Secretary,
3rd floor, No.1, Panagal Maligai Building,
Jennis Road, Saidapet,
Chennai 600 015.
Email-seiaamstn@gmail.com
Ph-044-24336421

3) The Government of Tamil Nadu
Rep.by its Chief Secretary,
Geology and Mining Department,
Fort St. George, Secretariat,
Chennai - 600 009.
Email-unknown
Ph-unknown

4) The Director
Directorate of Geology and Mining,
Industrial Estate,
Guindy, Chennai - 600 032
Email-geomine@tn.nic.in
Ph-22501873 and 22501874

5) The Assistant Director,
Department of Geology and Mining,
Collector's Office,
Karur District - 639007
Email- mine.tnkar@gmial.com
Ph-04324-255113.

6) The District Collector,
Karur District,
Karur 639 007
Email-cllrkar@nic.in
Ph-04324-257555

7) Tamil Nadu Pollution Control Board,
Rep.by its Director of district environment officers,
Ramkrishmapuram, Karur,
Tamil Nadu 639 001
Email-unknown
Ph-unknown

8) The Tashildar,
Tashildar Office, Pugalur,
Karur District - 639113
Email -talukpugtnkar@nic.in
Ph-04324-270370

9) Sri Venkatramana Swamy Blue Metals
Rep. by its Managing Partner,
No.128, Old By pass Road,
Pugalur,
Karur District 639 001.
Email-unknown ... Respondent(s)
Ph-unknown

**STATUS REPORT OF THE 5th RESPONDENT.**

I, Dr.P.Jayapal, S/o.Ponnusamy Hindu, aged about 51 Years , serving as Deputy Director, Department of Geology & Mining, Collectorate, Karur do hereby solemnly affirm and states as follows,

1) I am the 5th respondent to this Appeal. The Appellant challenges the Environmental clearance granted by the State Level Environment Impact Assessment Authority dated 24.08.2022 in EC ID No. EC 22B001TN113662 of file No:7702 in favour of Sri Venkataramana Swamy Blue Metals under B1 category for the project activity 1(a) Mining of Minerals.

2) I respectfully submit that, at the outset of this case, the application preferred by Sri Venkataramana Swamy Blue Metals for the grant of a roughstone and gravel quarry lease, under the provisions of rule 19(1) of the Tamilnadu Minor Mineral concession Rules 1959 was duly processed as per the existing procedures adopted in similar such cases. The area applied for quarry lease, measures an extent of 4.90.0 hectares in patta survey numbers 195/1(part) and 198/1 (Part) of Thennilai (East)village, Pugalur taluk of Karur district. Since the area comes under cluster category, as per this office letter no:535/Mines/2019 dated 20.05.2020 it had been intimated to SEIAA for necessary action. Acordingly, the TNPCB conducted public hearing

on 26.08.2021. Finally the SEIAA granted Environmental clearance vide letter no: SEIAA-TN/F.No.7702/1(a)/EC no. 5175/2020 dated 29.07.2022 and communicated to the project proponent on 24.08.2022. Accordingly lease granted on favour of Sri Venkatramanaswamy Blue Metals for a period of 10 years from 29.08.2022 to 28.08.2032. Further, the lessee firm obtained consent to operate from TNPCB, Karur vide ProceedingsNo.F.1638KAR/RS/DEE/TNPCB/KAR/A/2022, Dated:23.09.2022

i) The 1st and 2nd paragraphs of the appeal petition are not traversed, since they dealt about the prayer and activities of the appellant.

ii) I respectfully submit that the appellant narrates about the quarry leases held by the 9th respondent i.e. Sri Venkataramana Swamy Blue Metals from the year 1999 to 2021. In this regard I submit that the minor mineral stone quarries were brought into the purview of mining plan and Environmental clearances vide rule no. 41 and 42 of Tamilnadu Minor Mineral Concession Rules 1959, the stone quarrying activites prior to 06.04.2015 are devoid of such provisions.

iii) I respectfully submit that as per the paragraph 5 of the affidavit misconstrued the actual radial distances between Venkataramanasamy temple and the river channel to the area applied

for quarry lease by the 9th respondent. The Safety distances between the channel and the area granted lease is 30 m and also 20 m safety distance provided within the lease hold area, totally 50m provided as safety distance to the channel as per rule 36(1) of Tamilnadu Minor Mineral Concession Rules 1959. Distance between the foot hills of the Venkatramana Swamy Temple and lease area is 210m and the temple is situated at a distance of 340m on the peak of the hillock. Further, the distance between the lease area to Malaipalayam village is 350m. As per the rule 36(1) and (1-A) of Tamilnadu Minor Mineral Concession Rules 1959, the restrictions to quarrying activities to any permanent structure is only 50 metres and 300m to inhabited site.

iv) I further respectfully submit that as regards paragraph 7 of the affidavit, the application for the grant of a quarry lease was submitted by the 9th respondent on 04.09.2019. As per the prevailing procedures A1 notice inviting objections of the villagers of Thennilai East was published by the Tahsildhar on 25.09.2019. No objections were received or recorded by the Tahsildhar till its completion period. The appellant initiated the complaint petitions on the applicant only from 27.05.2022, by that time the precise Area Communication as per rule 41(4) of Tamilnadu minor mineral concession Rules 1959 vide letter no:

Rc.535/Mines/2019, dated 29.11.2019 and approval of mining plan dated 27.02.2020 were completed.

(v) I respectfully submit that as per the paragraph number 9 of the affidavit, the appellant alleges that the Mines and Minerals (Development and Regulation) Act 1957 and The Tamilnadu Minor Mineral Concession Rules 1959 were not adhered. I submit that the appellant without knowing the provisions involved in the said Acts and Rules haphazardly used the words according to his whims and fancies. In fact the government respondents responsible for the implementation of that project scrupulously followed them in all aspects.

I respectfully submit that the grounds furnished by the appellant are mere repetitions of the earlier paragraphs of his affidavit. Therefore the remarks submitted for the relevant paragraphs may be accepted by the Hon'ble National Green Tribunal (SZ) for the grounds furnished by the appellant.

Therefore, in view of the above I humbly submit that the Hon'ble National Green Tribunal (South Zone) may be pleased to accept these counter remarks for appropriate action and thus render Justice.

Signed :

Date : 29/11/2022

**VERIFICATION**

I, Dr.P.Jayapal, S/o.Ponnusamy, Deputy Director, Department of Geology and Mining, Collectorate, Karur, do hereby verified the contents of this Status Report and they are true to my personal knowledge, based on the Records, I have not suppressed any facts.

Signature : 29/11/22

Office Stamp: DEPUTY DIRECTOR, GEOLOGY AND MINING. KARUR.


No of Corns :

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

ந.க.எண். ஆ2/511/2019

வட்டாட்சியர் அலுவலகம்,
புகளூர் ,
நாள்: .09.2019

**ஏ1 விளம்பர அறிவிப்பு**

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், தென்னிலை கிழக்கு கிராம மக்களுக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது யாதெனில், தென்னிலை கிழக்கு கிராம புல எண்கள் 195/1 ஹெக்டேர் 1.86.0 ஏர்ஸ், மற்றும் 198/1 ஹெக்டேர் 3.04.0ஏர்ஸ், ஆகியவற்றில் மொத்தம் விஸ்தீரணம் ஹெக்டேர் 4.90.0 ஏர்ஸ் பரப்பில் சாதாரண கற்கள்/கிராவல் வெட்டியெடுக்க குவாரி குத்தகை உரிமம் கோரி தி/ள். ஸ்ரீ வெங்கடரமண சுவாமி புளூ மெட்டல்ஸ் நிறுவனத்தினர் கரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி தென்னிலை கிழக்கு கிராம புல எண்கள் 195/பி1 ஹெக்டேர் 1.86.0 ஏர்ஸ், மற்றும் 198/பி1 ஹெக்டேர் 3.04.0ஏர்ஸ், ஆகியவற்றில் மொத்தம் விஸ்தீரணம் ஹெக்டேர் 4.90.0 ஏர்ஸ். சாதாரண கற்கள்/கிராவல் வெட்டியெடுக்க கிராம பொதுமக்களுக்கு ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் அத்தகைய ஆட்சேபணையை எழுத்து மூலமாகவோ, நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இந்த அறிவிக்கை பிரசித்தம் செய்யப்பட்ட 7 நாட்களுக்குள் அடியிற்கையொப்பமிட்டவருக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வித ஆட்சேபணையும் வரப்பெறவில்லையென்றால், ஆட்சேபணைகள் ஏதுமில்லை எனக் கருதி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

வட்டாட்சியர்,
புகளூர்.

கிராம நிர்வாக அலுவலர், தென்னிலை கிழக்கு கிராமம் மேற்கண்ட விளம்பரத்தை நன்கு விளம்பரம் செய்து அதற்கான அத்தாட்சியை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்.

தென்னிலை கிழக்கு கிராமக் குடிகளாகிய நாங்கள் இந்த விளம்பர அறிவிக்கையை தண்டோரா மூலம் பிரசித்தம் செய்ததைத் தெரிந்து கொண்டோம்.

கிராமக் குடிகள் கையொப்பம் :-

தென்னை மரத்தை இவ்விடத்தில் பொதுமக்களுக்கு
மேலே கண்ட விபரத்தை பார்வை செய்து இதன் அசலை
பெற்று இவ்வலுவலகத்திற்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

3/10/19

கிராம நிர்வாக அலுவலர்
[illegible]
புதுக்கோட்டை [illegible] மாவட்டம்.

0231

27 MAY 2022

அனுப்புநர்:

த. பிரபாகரன் B.A.,B.L.,
வழக்கறிஞர்,
க.எண்.1/91-A காட்டுமுன்னூர் & அஞ்சல்,
புகளூர் வட்டம்,
கரூர் மாவட்டம்-639 111.
செல்:8124249393, 8680811611.

AD Gy SRI(ST) for joint inspection and report

27/5/22

பெறுநர்:

துணை இயக்குனர் அவர்கள்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
கரூர் மாவட்டம் - 639007

பொருள் :

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், தென்னிலை கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கட்ரமண சுவாமி கல்குவாரி மற்றும் கிரஷர் யூனிட் சட்ட விதிமுறைகளை மீறி இயங்குவதால் மேற்படி நிறுவனத்தை நிரந்தரமாக மூடி முத்திரையிடுமாறும், பொதுமக்கள், கால்நடைகள், விவசாயம் மற்றும் மேய்ப்பு நிலங்கள், உயிரினங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் போர்கால அடிப்படையில் இதனை சரி செய்து மேற்படி நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாக,

பார்வை :

| | |
|---|---|
| 1. RC. D 252/98 | DATED : 04.99 |
| 2. D.92/2004 | DATED : 08.11.2004 |
| 3. RC. B 317/G&M/2009 | DATED : 11.2009 |
| 4. ந. க 292/கனிமம்/2011 | நாள் : 13.06.2012 |
| 5. ந. க. எண் 1065/கனிமம்/2014 | நாள் :20.01.2016 |
| 6. ந. க. எண் 851/கனிமம்/2017 | நாள் :20.01.2018 |

ஐயா,

நான் மேற்படி முகவரியில் வசித்து வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், தென்னிலை கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கட்ரமண சுவாமி கல்குவாரி சம்பந்தப்பட்ட ஆவணங்களை தகவல் அறியும் உரிமை சட்டம்-2005 ன் கீழ் சம்பந்தப்பட்ட அரசு அலுவலகமான உதவி இயக்குனர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை கரூர், அவர்களிடமிருந்து பெற்று பார்வையிட்டதில், மேற்படி கல்குவாரி குவாரிதொழில் செய்வதற்கு

விண்ணப்பித்த போது, விண்ணப்பத்துடன் தாக்கல் செய்துள்ள மைனிங் பிளான்-ல் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் விதமாகவும், பொதுமக்கள் கால்நடைகள் இயற்கை வளங்கள் மற்றும் உயிரினங்களுக்கு பாதிப்பு மற்றும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாகவும், இயற்கை வளங்களை அழித்து கனிமங்களை அனுமதி பெற்றதற்கு அதிகமாக கொள்ளையடித்திருப்பது தெரியவந்துள்ளது. அவற்றுள் மிக முக்கியமாக MMR-1961, பிரிவு-106(2)(b) ன் படி 5 மீட்டர் நீளமும் 5 மீட்டர் உயரமும் கொண்டு பெஞ்ச் அகலம் மற்றும் செங்குத்து அளவிலான அளவில்தான் கல்குவாரி உடைக்கப்பட வேண்டும் அவ்வாறு சாத்தியக்கூறுகள் இல்லாத பட்சத்தில் சட்டத்தால் வழிவகை செய்யப்பட்ட மாற்று வழி அளவீடான 60° டிகிரி சாய்வான கோணத்தில் கல்குவாரி இயங்கவேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட கல்குவாரி ஆனது குத்தகை காலம் முடிவுற்ற புல எண்கள் 191 உட்பிரிவு 3 மற்றும் 192 ஆகியவற்றில் இயற்கையை சீரழித்து இயற்கை வளங்களை கொள்ளை அடிக்கும் நோக்கிலும் அரசை ஏமாற்றி அரசிற்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தி சுய லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் சட்ட விதிமுறைகளை மீறி மைனிங் ப்ளானில் குறிப்பிட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டுள்ளதை மீறி பள்ளத்தாக்கு போன்ற மிகப்பெரிய அளவிலான செங்குத்தாக குழிதோண்டி உள்ளனர். மேலும் புல எண்கள் 191/3 மற்றும் 192 க்கான குவாரி உரிமத்தில் உரிமம் பெற்றது முதல் புதுப்பித்ததுடன் சேர்த்து 20 வருடங்கள் குவாரி தொழில் செய்துள்ளனர். இதில் மேற்படி சர்வே எண்களுக்கு மொத்தமாக 20 வருடங்களுக்கு வெட்டி எடுக்கவேண்டிய பாறையின் அளவு தரைமட்டத்திலிருந்து அதிகபட்ச ஆழம்-39 மீட்டர் ஆகும். ஆனால் மேற்படி கல்குவாரியில் சுமார் 150 மீட்டருக்கு மேலாக வெட்டி எடுத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட புல எண்களில் வெட்டி எடுத்த பாறைக்குழியை பார்வையிட்டால் தற்போது தமிழகத்தையே ஒட்டுமொத்தமாக உலுக்கிக் கொண்டிருக்கும் திருநெல்வேலி வெங்கடேஸ்வரா கல்குவாரி சம்பவத்தை மீறும் விதமாக பெரிய பள்ளத்தாக்கு போன்று காட்சியளிக்கிறது. மேலும் 1999 முதல் 2014 வரை மூன்று குத்தகை காலத்திற்கு மைனிங் ப்ளான் இல்லை. ஆகவே புவியியல் மற்றும் சுரங்கத்துறை, வட்டாட்சியர் ஆகியோர்கள் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ள அளவீட்டின்படி புல எண்கள் 191/3 மற்றும் 192 க்கு அதிகபட்ச நீளம்-387 மீட்டர், அதிகபட்ச அகலம்-114 மீட்டர், அதிகபட்ச ஆழம்-24 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2016 முதல் 2021 ஆம் வருட குத்தகை காலத்திற்கு தோண்டி எடுக்க இருக்கும் அளவீடாக குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச நீளம்-407 மீட்டர், அதிகபட்ச அகலம்-87 மீட்டர், தரைமட்டத்திலிருந்து அதிகபட்ச

ஆழம்-39 மீட்டர் ஆகும். மேன்மை பொருந்திய ஐயா அவர்கள் இதனை உற்றுநோக்கும் பட்சத்தில் 1999 முதல் 2014 வரை புவியியல் மற்றும் சுரங்கத்துறை மற்றும் வட்டாட்சியர் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்த அதிகபட்ச அகலம்-114 மீட்டர் என்று இருக்கும் பட்சத்தில் அதற்கு அடுத்து ஐந்து ஆண்டுகள் குத்தகை காலத்திற்கு 27 மீட்டர் அகலத்தை குறைத்து அதே புல எண்களில் 87 மீட்டர் என்று மைனிங் ப்ளானில் அப்பட்டமாக பொய்யான தகவலை அரசிற்கு தெரிவித்தது மிகப்பெரிய திருட்டு மற்றும் கொள்ளை குற்றமாகும். அதற்கு அடுத்தாற்போல மேற்படி புல எண்களுக்கு உண்டான நிலம் அமைந்துள்ள சுற்றுவட்ட பகுதியின் பருவ சூழ் நிலை மாற்றத்திற்கு ஏற்ப நிலத்தடி நீர் 2016 முதல் 2021 வரையிலான குத்தகை காலத்திற்கு மேற்குறிப்பிட்ட கல்குவாரி மைனிங் பிளான் படி வெயில் காலத்தில் 50 மீட்டர், மழைக்காலத்தில் 45 மீட்டர் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்குறிப்பிட்ட கல்குவாரியில் சுமார் 150 மீட்டருக்கும் மேலாக தோண்டப்பட்டு இருப்பதால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டதுடன் அந்தப் பகுதி மக்கள் விவசாயம் குடிநீர் மற்றும் உயிரினங்கள் வாழ்வதற்கு தகுதியற்ற இடமாக காட்சியளிக்கிறது. மேலும் மேற்குறிப்பிட்ட புல எண்களில் குவாரி தொழில் செய்வதற்குண்டான குத்தகை இடத்தை சுற்றியுள்ள எல்லைகளில் கிரீன் பெல்ட் அமைந்துள்ள பகுதியான 7.5 மீட்டர் (தோராயமாக 1600 சதுர மீட்டர்) இடத்தில் ஒவ்வொரு வருடமும் இருபது வேப்ப மரங்களை நடவு செய்துள்ளதாக மைனிங் பிளானில் கூறியுள்ளனர். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக 7.5 மீட்டர் தூரத்திற்கு பாதுகாப்பு இடைவெளியே மேற்குறிப்பிட்ட கல்குவாரியில் இல்லை. மேலும் மேற்படி புல எண்களில் உள்ள கல்குவாரி மலைபாளையத்திலிருந்து கிடைக்காரன்பாளையம் செல்லும் பிரதான பஞ்சாயத்து தார்சாலைக்கு 3 அடி(1மீட்டர்) தூரத்தில் அபாயகரமாக பள்ளத்தாக்கு போன்று தோண்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குவாரிக்கு வடமேற்கு திசையில் உள்ள நொய்யல் ஆற்று நீர்ப்பாசன வாய்க்கால் புறம்போக்கு(Noyyal irrigation canal) இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கழிவுகளைக் கொட்டியுள்ளனர். மேற்படி கழிவுகள் மழை மற்றும் காற்று காலங்களில் சரிந்து மேற்படி வாய்க்காலில் விழும் போது நீர் மாசுபடும் அபாயமும் கூடவே வாய்க்கால் பாசனம் தடையுற்று வாய்க்கால் மூடி போகும் அபாயமும் உள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட புல எண்களில் குத்தகை காலம் முடிந்து மேற்படி குவாரி குழியானது சுற்றுவட்டப் பகுதியில் உள்ள கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளுக்கு நீர்மட்டம் உயர்வதற்கு வழிவகை செய்வதாக மைனிங் பிளானில் தெரிவித்துவிட்டு, தற்போது அனுமதிக்கப்பட்ட அளவைவிட

அதிகமாக இயற்கை வளங்களை கொள்ளையடித்ததை மறைப்பதற்கு அவசரகதியில் எம்-சாண்ட் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அபாயகரமான வேதிப்பொருட்கள் கலந்துள்ள கழிவுகளை கொண்டு மூடி வருகின்றனர். இந்த வேதி கழிவுகள் நிலத்தடி நீரில் கலப்பதால் சுற்று வட்டபகுதிகளில் உள்ள குடிநீர் விஷத் தன்மையாக மாறி மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படுத்துகிறது. மேலும் சுற்றுவட்ட பகுதிகள் விவசாயம் மற்றும் கால்நடை மேய்ப்பு போன்றவற்றிற்கு தகுதியற்ற நிலமாக காட்சியளிக்கிறது. மிக முக்கியமாக மேற்படி குவாரி அமைந்துள்ள இடத்திலிருந்து சுமார் ஒரு மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ள மலைபாளையத்திலிருந்து கிடைக்காரன்பாளையத்திற்கு செல்லும் பிரதான பஞ்சாயத்து சாலையையும், சுமார் 10 மீட்டர் தூரத்திலுள்ள நொய்யல் ஆற்றுப் பாசன வாய்க்காலையும், சுமார் 5 மீட்டர் தூரத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க மலைமேல் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கட்ரமண சுவாமி திருக்கோவிலையும், சுமார் 300 மீட்டர் தூரத்தில் உள்ள மலைபாளையம் என்ற ஊரையும் அதிலுள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும் மற்றும் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள கிடைக்காரன்பாளையம் என்ற ஊரையும் அதில் உள்ள சுமார் 80க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும் மறைத்து மைனிங் பிளான் தாக்கல் செய்துள்ளனர். மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் கிரஷர் யூனிட் மற்றும் எம்சாண்ட் தயாரிக்கும் நிறுவனத்திலிருந்து அதிகளவில் வெளியேறும் மாசு துகள்கள் அப்பகுதி சுற்று வட்டாரத்திலுள்ள விவசாயம் மேய்ப்பு நிலங்கள் வரலாற்றுப் பெருமைமிக்க மலை கோவில்கள் நீர்நிலைகள் சாலைகள் மரம் செடிகள் ஆகியவற்றின் மீது படிந்து அபாயமான அழிவை ஏற்படுத்துவதுடன் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு சுவாச பிரச்சனைகளையும் ஏற்படுத்துகிறது. மேலும் மேற்படி நிறுவனம் அளவுக்கு அதிகமான எடைகொண்ட கருங்கல் ஜல்லி எம்-சாண்ட் அபாயகரமான கழிவுகள் ஆகியவற்றை கனரக வாகனங்கள் மூலமாக பொதுப்பணித் துறையால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு மட்டும் பயன்படும் வகையில் கட்டமைக்கப்பட்ட வாய்க்காலின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தின் வழியாக ஏற்றி வருவதால் அந்தப் பாலம் தற்போது எந்த நேரமும் இடிந்து விழும் அபாயமான சூழ்நிலையில் உள்ளது. மேலும் மேற்படி நிறுவனம் மைனிங் பிளானில் ஜேசிபி போன்ற வாகனங்களை பயன்படுத்துவதாக தெரிவித்து விட்டு தற்போது சுமார் 10 கிட்டாச்சி இயந்திரங்களை பயன்படுத்தி தோண்டுவது மற்றும் கனரக வாகனங்களுக்கு கற்கள் ஏற்றுவது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றன. சட்ட

விதிமுறைகளை பின் பற்றாமல் மேற்படி நிறுவனத்தின் கிரசர் யூனிட்டில் இருந்து ஜல்லி அரைக்கும்போது வெளிவரும் அளவுக்கு அதிகமான மாசு கலந்த புகை மூட்டத்தினால் அந்தப் பகுதியில் உள்ள சாலைகளை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு தகுதியற்றதாக மாறிவிட்டது அவ்விதமான மாசு கலந்த புகையினை பொதுமக்களோ கால்நடைகளோ சுவாசிக்கும்போது நுரையீரல் பிரச்சனைகளும் கண் எரிச்சல் மற்றும் பல்வேறு சுவாச பிரச்சனைகளும் ஏற்படுகிறது. மேற்படி நிறுவனம் நடப்பு குத்தகை நிலத்தில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட (அனுமதி அளிக்கப்பட்ட அளவை விட அதிகமான அளவில்) கற்களை அதிக தொலைவில் இருந்து அவர்களது கிருஷர் யூனிட்டிற்கு ஏற்றி வருவதால் அந்த சாலையானது அவர்களின் சொந்த உபயோகத்தை தவிர்த்து பொதுமக்கள் பயன்படுத்த தகுதியற்ற சாலையாக மாறிவிட்டது.அதி முக்கியமாக மேற்படி நிறுவனம் எம்-சாண்ட் அளவினை அனுமதி அளித்ததற்கு அதிகமாக உற்பத்தி செய்வதால் அபாயகரமான வேதிப்பொருட்கள் கலந்த கழிவுகளை MOEF நியமம் பரிந்துரை செய்துள்ள சட்ட விதிகளை பின்பற்றாமலும் அரசு நெறிமுறைகளை மதிக்காமலும் கிடைத்த இடத்தில் கொட்டி வருகின்றனர் இந்நிலை தொடருமேயானால் அந்த பகுதி விரைவில் பாலைவனமாக காட்சியளிக்கும்.

எனவே சமூகம் அவர்கள், சட்ட விதிமுறைகளை மீறி மனித உயிரினங்களுக்கும், கால்நடைகளுக்கும், இயற்கை வளங்கள்,விவசாயம் மற்றும் மேய்ப்பு நிலங்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்தும் வகையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ வெங்கட்ரமண சுவாமி ப்ளூ மெட்டல் நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், புல எண்கள் 191(3) மற்றும் 192 ஆகியவற்றில் தோண்டப்பட்டுள்ள அபாயகரமான பள்ளத்தாக்கிலிருந்து உயிரினங்களை காப்பாற்றி திருநெல்வேலி மாவட்டத்திலும், கரூர் மாவட்டம் குப்பம் கிராமத்திலும் அரங்கேறி உள்ள மனதை பதறவைக்கும் கொடூர சம்பவத்தை போல தென்னிலை கிழக்கு கிராமத்தில் மீண்டும் ஒரு சம்பவம் நடப்பதற்கு முன்பாக மேற்படி புல எண்களில் விதிமுறைகளை மீறி தோண்டப்பட்டுள்ள பள்ளத்தாக்கிற்கு மிக அருகில் உள்ள பஞ்சாயத்து சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிலிருந்து தடை செய்து உத்தரவிடுமாறும், சட்ட விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறாக இயங்கிக் கொண்டிருக்கும் மேற்படி நிறுவனத்தின் நடப்பிலுள்ள குத்தகை அனுமதியினையும் புதிதாக அனுமதி

கோரியுள்ள விண்ணப்பத்தையும் ரத்து செய்து மேற்படி நிறுவனத்தினை நிரந்தரமாக மூடி முத்திரையிடும்படியும், புல எண்கள் 191(3) மற்றும் 192-ஐ தரை மட்டத்திலிருந்து துல்லியமாக அளவீடு செய்து அரசை ஏமாற்றி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்கு, அனுமதிக்கப்பட்ட அளவை மீறி கொள்ளையடித்த கனிம வளங்களின் மதிப்பிற்கு பல மடங்கு அபராதம் வசூலித்தும், அரசை ஏமாற்றி அனுமதித்த அளவை விட அதிகமாக கனிமத்தை தோண்டி திருடிய குற்றத்திற்காக சம்பந்தப்பட்ட குவாரி உரிமையாளர் மீது குற்ற நடவடிக்கை மேற்கொண்டு ஆவண செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். மேலும் இது மனித உயிர்கள் மற்றும் அப் பகுதியின் இயற்கை சார்ந்த வாழ்வாதார பிரச்சனை சம்பந்தமான புகார் என்பதனால் இதனை அவசர சூழ்நிலை புகாராக எடுத்துக்கொண்டு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேற்படி கல்குவாரிக்கு எதிராகவும், விதிமீறல்கள் நடந்துள்ளது என்பது தெரிந்தும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தவறிய உங்களை உள்ளிட்ட அரசு அதிகாரிகளுக்கு எதிராகவும் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் :26.05.2022

இடம்: கரூர்

இப்படிக்கு,

T. [signature]

26/05/2022